www.tamilarangam.net


# ஈழச்செய்தி
EELAM NEWS

★EPIC

(ESTD IN 1980) POSTBAG 5551, MADRAS-600094. INDIA.

கடிதம் : **26** ஜனவரி **1985**


## போது மன்னிப்பு கேட்க "தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம்" தயாரா ?

### போராளிகள் வேடத்தில் கொலைபுரியும் கூட்டமே!

### சுழிபுரம் படுகொலைக்குப் பதில் என்ன ?

கீழ்த்தரமான இனவெறியுடன், மிருகத்தனமான இரத்தவெறிகொண்டு சிறீலங்கா கொலைப் பட்டாளங்கள் ஈழத்தில் புகுந்துள்ளன.

அமெரிக்க "சி. ஐ. ஏ." இஸ்ரேலிய "மொசாட்" கொலைக்கும்பலிடம் பயிற்சி பெற்று, ஏகாதிபத்தியம் தயாரித்து வழங்கும் கொடிய போதை மருந்துகளை உட்கொண்டு சிறீலங்கா படுகொலைப் பட்டாளங்கள் கொலை வெறிகொண்டு அலைகின்றன.

உயிரோடு எரிக்கப்பட்டுத் தீய்ந்துபோன உடல்களும், பலாத்காரப்படுத்தப்பட்டுச் சிதைந்து போன தமிழ்ப் பெண்களின் சடலங்களும், பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டுக் கொலையுண்டு போன பச்சிளம் சிறுவர்களின் எண்ணற்ற உருக்குலைந்த உடல்களும் ஈழ வீதிகளில் இரத்த சகதியில் மிதக்கின்றன.

இந்த இடர்மிகுந்த வேளையில் ஈழத்து மக்களின் விடுதலை அமைப்புகள் மிகவும் நிதானமாகச் செயல்பட வேண்டும். ஆத்திர மூட்டிப் படுகொலை செய்யும் ஈவிரக்கமற்ற எதிரிகளின் வியூகங்களைத் தகர்த்தெறிய அனைத்து விடுதலை இயக்கங்களும் தமது துப்பாக்கிகளை உயர்த்தியுள்ளன. ஒவ்வொரு விடுதலை அமைப்பும் தமது அணிகளையும், மக்களையும உறுதியான போராட்டத்திற்குத் தயார் செய்யும் போது எதிரியின் சதி, பிளவு வேலைகளையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

விடுதலை இயக்கங்களுக்கிடையே குத்து வெட்டுகளை உருவாக்க சிறீலங்கா அரசு தீவிரமாகச் செயல் படுகிறது.

விடுதலை இயக்கங்களுக்கிடையே உள்ள ஒற்றுமையின்மையைத் தனக்குச்சாதகமாக்கிக் கொள்ள சிறீலங்கா அரசு முனைகிறது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழப்புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என்னும் மூன்று விடுதலை அமைப்புகள் ஒன்றுபட்டுக் கூட்டமைப்பாகச் செயல்படுவது வரவேற்கத் தக்கது. ஏனைய விடுதலை அமைப்புகளும் இந்தக் கூட்டமைப்பில் இணைந்து கொள்வது போராட்ட முன்னெடுப்புக்குக் காத்திரமானதாக அமையும்.

ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து தோழமையுணர்வுடனும், பரஸ்பர நம்பிக்கையுடனும் செயல்பட வேண்டியது முக்கியமாகும். இதன் மூலம் சிறீலங்கா அரசின் சதிச்செயல்களுக்கு முடிவுகட்ட முடியும்.

இன்று ஆக்கிரமிப்பாளரின் சுற்றி வளைப்புக்கிடையே போராடி வரும் அமைப்புக்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்துச் செயல்படுகிறார்கள்.

ஆனால் விடுதலையின் பெயரால் சுயவிளம்பரங்கள் செய்வதையே நோக்கமாகக் கொண்டலைவோரும் "போராளிகள்" வேடத்தில் மறைந்து நிற்கிறார்கள்.

***சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர் மீது பழியைப் போட்டுவிட்டுத் தமது குரோதங்களைத் தீர்க்க துப்பாக்கி தூக்கித்திரியும் கூட்டமொன்று புறப்பட்டுள்ளது***

நேரடியான எதிரியை இனம் காண்பது சுலபம். ஆனால் விடுதலையின் பெயரால் துப்பாக்கியைத் தூக்கியபடி சகபோராளிகள் முதுகுகளில் குத்தும் கூட்டத்திடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க


ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு
EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH : EPIC B. M. Box 1738, LONDON WCI N 3XX


தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேண்டும். எப்போதும் நண்பர்கள் போல் நடித்து கட்டியணைக்கிறேன் வா எனக்கூறிக் கத்தியைப் பாய்ச்சும் ஆட்கள் மிகவும் கொடியவர்கள். இவர்கள் இனம் காணப்பட்டுத் தூக்கி வீசப்படா விட்டால் போராட்டத்தின் நலன்களுக்கு இடையூறு ஏற்படும்.

கடந்த காலங்களில் சிந்தனைத் தெளிவற்றோரின் துப்பாக்கிகள் சக போராளிகளைக்குறி வைத்தன. பலரைப்பலி கொண்டன. ஈழப் போராட்ட வரலாற்றில் கறைபடிந்த இந்தச் சம்பவங்கள் இன்னும் தொடர்கின்றன. அதுவும் சிறீலங்கா கூலிப்படைகள் மக்களைக் கொன்று குவிக்கும் போது, இவர்களும் சக போராளிகளைக் கொன்று குவிக்கின்றனர். இதன் மூலம் சிறீலங்கா படைகள் மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பிக்க முற்படும் மன்னிக்கமுடியாத **குற்றவாளிகளாக** ஈழமக்கள் மத்தியிலுள்ள வேடதாரிகள் மாறியுள்ளனர்.

ஏற்கனவே உள் முரண்பாடுகளைத் தீர்க்கவும், சக போராளிகளை மிரட்டவும், உதைக்கவும், வதைக்கவும், படுகொலை புரியவும் துப்பாக்கி தூக்கிய கொலைக்கரங்கள் இப்போது சுழிபுரத்தில் தமது கைவரிசையைக் காட்டியுள்ளன.

**உமாமகேஸ்வரன் என்றும், முகுந்தன் என்றும் அழைக்கப்படுபவரால் தலைமை தாங்கப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் கொலைவெறி கொண்டலையும் கோரத்தனம் ஆறு போராளிகளைப் பலியெடுத்திருக்கிறது**

''தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்'' இயக்கத்தின் ஆறு போராளிகள் கொடூர வதையின் பின் புதை குழிகளுக்குள் மறைக்கப்பட்டுள்ளனர். இதை நேரில் கண்டார்கள் எனக்கருதி **இரு அப்பாவிகளையும் பாசிஸ்டுக்கள்'' பாணியில்** தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் படுகொலை செய்துள்ளனர்.

''தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகம்'' வழமை போல் மறுப்புகள் மூலம் இந்தக் கோரத்தனத்தை மறைக்க முடியாது. சுழிபுரம் மக்களும், கொலைஞர்களால் துப்பாக்கி காட்டி மிரட்டப்பட்ட மக்களும் யார் கொலையாளிகள் என்பதை அடையாளம் கண்டுள்ளனர்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தவறுகள் பெருகிக் குவிந்துவிட்டதற்கு உதிரம் சிந்தி உருக்குலைந்து கிடக்கும் எட்டு மனித உடல்கள் சாட்சியமளிக்கின்றன.

இந்தப் படுகொலைகளை மௌனமாகப் பார்த்திருப்பதன் மூலம் மேலும், மேலும் படுகொலைகள் தொடர ஈழ விடுதலையில் அக்கறையுள்ள அமைப்புகள் அனுமதியளிக்கப் போகின்றனவா? ஈழப் போராட்ட வரலாற்றைக் கறைப்படுத்தும் இந்தக் குற்றத்தனங்கள் இனியும் தொடர அனுமதிக்க முடியுமா? ஒற்றுமை என்ற பெயரில் தம் மத்தியிலேயே ஒரு கூட்டம் கொலைவெறி கொண்டலைவதை ஈழ அமைப்புக்கள் ஏற்றுக் கொள்ளப் போகின்றனவா?

ஒற்றுமை என்பது ஈழ மக்களின் விடுதலைப் போராட்ட வெற்றிக்காகவும், மக்களைப் பாதுகாத்து எதிரியை முறியடிப்பதை நோக்கமாகக் கொண்டும் தானே உருவாக முடியும். ஆனால் போராடும் தமது சக தோழர்களைக் கருவறுக்கும் கூட்டத்துடன் நம்பிக்கையோடு எவ்வாறு ஒற்றுமையை உருவாக்குவது. தலைமறைவாகச் செயல்படும் அமைப்புக்களிடையே ஒற்றுமை என்பது நம்பிக்கையீனத்தின் அடிப்படையில் எவ்வாறு ஏற்பட முடியும். இந்தக் கேள்வியைத்தான் கோழைத்தனமான முறையில் கொல்லப்பட்டுள்ள போராளிகள் உடல்கள் எழுப்பியுள்ளன. விடுதலை மீது பற்றுதி கொண்ட அமைப்புகள் இந்த வினாவை எண்ணிப் பார்க்கவேண்டும்.

படுகொலைளைப் புரிந்துவிட்டு, கொலையாளிகளின் விபரங்களைச் சுழிபுரம் மக்களே தெளிவாக கூறும் போதும் கூச்ச நாச்சமின்றி மறுப்புவிடும் ''தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை'' **மக்களிடம் பொது மன்னிப்பு** கேட்குமாறு ஈழ விடுதலை இயக்கங்கள் வற்புறுத்த வேண்டும். இல்லையெனில் இந்தக் கோரத்தனத்தை மக்கள் முன் அம்பலமாக்கி மக்கள் மூலம் கொலையாளிகளுக்குப் பாடம் புகட்ட வேண்டும்.

ஏனெனில் எமக்குக்கிடைத்துள்ள செய்திகள் விடுதலை என்ற பெயரில் நடக்கும் விபரீத விளையாட்டுகளை உடன் நிறுத்தியாக வேண்டிய அவசியத்தை உணர்த்துகின்றன.

விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் குழுவொன்றுக்குள் குத்து வெட்டுகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த சேகர், கூச் மற்றும் பல போராளிகள் இரகசியமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக்குழுவிற்குள் இன்னும் பலர் கொலை செய்யப்படுவதற்கான தயாரிப்புக்களும் நடக்கின்றன.

தமது பிள்ளைகளை இராணுவ முகாமுக்கு அனுப்புவதும் விடுதலை இயக்கங்களுக்கு அனுப்புவதும் ஒன்றுதான் என்ற எண்ணம் மக்களுக்கு ஏற்பட்டால் நிலை என்னவாகும்? விடுதலை இயக்கங்கள் உறுப்பினர்களைத் திரட்டுவது தடைபடும் என்பது ஒரு புறம் இருக்கட்டும், மக்கள் விடுதலை மீதே நம்பிக்கை இழந்து விடுவார்களே, இதைத்தான் ஒவ்வொரு இயக்கமும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனவே உடனே இந்த விடயத்தில் உரிய முறையில் செயல்படுமாறு ஈழ விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்புக்கும் (TELO, EROS, EPRLF) ஏனைய விடுதலை அமைப்புகளுக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம்.

மீண்டும் நாம் வற்புறுத்துவது இதுதான்:இந்தப் படுகொலைகளுக்கு உமாமகேஸ்வரன் தலைமையிலான ''தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம்''

**பொது மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லையேல் இவர்களை மக்களிடம் இருந்து, மக்கள் மூலமே தூக்கி வீச விடுதலை அமைப்புக்கள் முன்வர வேண்டும்.** ●

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் விடுதலையா? மனித வேட்டையா?

# உதட்டளவில் ஒற்றுமை கோஷமிடுகிறார்கள்!

**சுளிபுரத்தில் தமிழ்ஈழ மக்கள் விடுதலைக்கழகத்தால் ஆறு போராளிகள் படுகொலையானதைக் கண்டித்துத் "தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்" வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது.**

தமிழ் மக்கள் நூற்றுக் கணக்கில் காரணமின்றிக் கைதாவதும் பின்—கண்காணாத இடத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுவதும் மிகக் கொடூரமான சட்டங்கள் அமுல்படுத்தப்படுவதும் சிறீலங்கா அரசின் நாளாந்த நடவடிக்கையாகி விட்ட இன்றைய சூழ்நிலையில் நமது மனதை உலுக்கும் சில நிகழ்வுகள் நடந்துள்ளன. சிறீலங்கா இன வெறி அரசின் இக்கொடூர அடக்குமுறை விடுதலைப் போராட்ட வளர்ச்சிக் காலகட்டத்தில் சகஜமே. ஆனால் இயக்கப் போர்வையில் நடமாடும் கொலை வெறிக் கும்பலின் கொடூர நடவடிக்கைகள் சகிக்க தக்கவையல்ல.

25-11-84 அன்று பிற்பகல் 4 மணியளவில் எமது இயக்க இளம் வீரர்கள் நால்வர், மூளாய் பொன்னாலை பகுதியில் சுவரொட்டி ஒட்டும் நிமித்தம் நிராயுதபாணிகளாக சுளிபுர பகுதியால் சென்று கொண்டிருந்த வேளையில் வானில் (Van) வந்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களால் (PLOT) இப்போராளிகள் பலவந்தமாக வானில் ஏற்றப்பட்டு ஆயுதமுனையில் மிரட்டப்பட்டு, பின்பு இறக்கிவிடப்பட்டனர். (மிரட்டியவர்களின் பெயர்களைகுறிப்பிட நாம் விரும்பவில்லை). ஏற்கனவே இப் போராளிகள் மிரட்டியவர்களுக்கு அறிமுகமானவர்கள் என்பதால் எமது இயக்க வீரர்களை இனம் காண முடியாத நிலையில் இச்சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறிவிட முடியாது. நிராயுதபாணிகளான விடுதலைப் போராளிகளை ஆயுதமுனையில் அச்சுறுத்துகின்ற இச் செயல் கொடூரமான சிறீலங்கா இராணுவத்தின் செயலை ஒத்ததாகவே உள்ளது. இத்தகைய செயல்கள் சிறீலங்கா இராணுவத்திடமிருந்து இவர்களை வேறுபடுத்திப் பார்க்கும் எமது போக்கினை மாற்றி அமைப்பதாகவே உள்ளது.

மேற்குறிப்பிட்ட சம்பவத்தைவிட இதே திகதியன்று சுளிபுர பகுதியைச் சேர்ந்த வேறு ஆறு இளம் வீரர்கள் அங்கு எமது இயக்க சுவரொட்டிகளை ஒட்டுவதற்காக இரவு 8 மணியளவில் சென்று கொண்டிருந்த வேளையில் சுளிபுரத்தில் வைத்து சதிகாரக் கும்பலினால் கடத்திச் செல்லப்பட்டனர். கடத்திச் சென்றவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காகத்தான் போராடுகிறார்கள் என்ற அடிப்படையில் இப் போராளிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என யாவரும் நம்பியிருந்தனர்.

## "மக்கள் விடுதலைக்கழகத்தின்" மனிதவேட்டை!

யாழ்ப்பாணத்திலுள்ள சுளிபுரம் என்ற இடத்தில் "தமிழ் ஈழ விடுதலைப் புலிகள்" இயக்கத்தின் ஆறு போராளிகள் "தமிழீழமக்கள் விடுதலைக் கழகத்தால்" கோரத்தனமாக கொலை செய்யப் பட்டுள்ளனர். இதுதவிர இச் சம்பவத்தை நேரே கண்டு விட்டனர் என கொலைஞர்களால் கண்டு பிடிக்கப்பட்ட அப்பாவி பொதுமக்கள் இருவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் ஆனால் இச் சம்பவத்தை பொதுமக்களில் பலர் நேரில் கண்டுள்ளனர். சுளிபுரம் பகுதியில் தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் காலடிஎடுத்து வைக்கமுடியாத அளவுக்கு மக்கள் கொதிப்படைந்துள்ளனர். "தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் புதியபாதை என்ற பத்திரிகையை விற்றவர்களே" இக்கொலையில் நேரடி பங்கு கொண்டனர் என சுளிபுரம் மக்கள் இனம் கண்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட ஆறு போராளிகளினது ஆணுடம்புகள் அறுக்கப்பட்டிருந்தன. அவர்கள் உடல்கள் குரூரமாக சிதைக்கப்பட்டிருந்தன.

புதைகுழிகளுக்குள் மூடப்பட்டிருந்த இவர்களது உடல்களை தோண்டியெடுக்க முற்பட்ட மக்களை "தமிழீழ மக்கள் விடுதலைக்கழக" உறுப்பினர்கள் சிலர் துப்பாக்கி முனையில் மிரட்டி தடுத்துள்ளனர். இதனால் இப்பகுதி மக்களிடம் பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

அணு, அணுவான சித்திரவதையின் பின் படுகொலை செய்யப்பட்ட போராளிகளின் உடல்கள் மக்களின் துணையுடன் எரிக்கப்பட்டது. "தமிழ் ஈழவிடுதலைப் புலிகள்" இயக்க போராளிகள், தமது சக தோழர்கள் உடல்களை இறுதி வணக்கத்துடன் எரித்தனர். ஊர்மக்களும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிப் போராளிகள் சிலரும் இதில் பங்கு கொண்டனர் ●

இவ் ஆறு விடுதலைப் போராளிகள் கடத்திச் செல்லப்பட்டு ஒரு சில நாட்களின் பின் 'புதிய பாதை' விற்க வந்த தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்கள் (PLOT) கடத்தப்பட்டோரின் வீட்டாரிடம் ஆறு பேரையும் தாம் சுளிபுரப் பகுதியில் உள்ள ஜெயந்தி மில் சந்தியில் இரவு 10 மணியளவில் பிடித்ததாகவும் பின்பு விடுவித்ததாகவும் கூறியுள்ளனர் (கூறியவர்களின் பெயர் விபரங்களை குறிப்பிட நாம் விரும்பவில்லை). குறித்த தினத்தில் இராணுவத்தினர் சுளிபுரத்தினுள் நுழையவில்லை என்பதால் நாம் தொடர்ந்தும் தேடினோம்.

9-12-84 அன்று சுளிபுரத்திலுள்ள ஒதுக்குப்புறமான இடத்திலுள்ள கிடங்கில் கை தெரிவதாகக் கிடைத்த தகவலை தொடர்ந்து அங்கு சென்ற போது ஏற்கனவே வந்திருந்த ஊர்மக்களும் உறவினர்களும் தாங்கள் கிடங்கை கிண்டமுற்பட்டபோது தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்கள் (PLOT) ஆயுதங்களுடன் வந்து தங்களைத் தடுத்தாகவும் நீங்கள் (LTTE) வருவதைக் கண்டதும் போய் விட்டதாகவும் தெரிவித்தனர். அதனைத்தொடர்ந்து ஊர் மக்களின் உதவியுடன் கிடங்கிலிருந்து சடலங்களை மீட்டு எடுக்கும்போது வேறு இரு சடலங்களுடன் எம் ஆறு இளம் வீரர்களையும் இவ்விரண்டாக மூன்று புதைக் குழிகளில் காணக் கூடியதாயிற்று.

www.tamilarangam.net


சிங்கள இராணுவத்தின் கொடிய சித்திரவதைகளைவிட மிகமோசமான கொடூரமான சித்திர வதைகளை நம் இயக்க வீரர்கள் அனுபவித்திருக்கிறார்களென அவர்களின் சடலங்களிலிருந்து காணக் கூடியதாக இருந்தது. கை, கழுத்து, ஆணுடம்பு வெட்டப்பட்டு கழுத்து நெரிக்கப்பட்டு அணுஅணுவான சித்திர வதையினூடாகத்தான் அவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது புலனானது.

சுளிபுரத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவ் ஆறு வீரர்களும் இளம் வயதிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைத்து அந்தக் கிராமத்தில் முழுமுச்சாய் வேலை செய்து வந்தவர்கள். எம்மால் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்ட சுந்தரத்தின் உறவினர்களான இவர்கள் சுந்தரத்தின் தண்டனைக்கான நியாயமான நீதியான காரணத்தை ஏற்று எம்முடைய வழி காட்டலின் கீழ் வளர்ந்தவர்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்த நிராயுதபாணிகளான நிரபராதிகளின் படுகொலை ஓர் திருப்புமுனை.மக்கள் விடுதலையைநேசிக்கின்றஒவ்வொருவரும் இந்தப் படுகொலையை மன்னிக்கபோவதில்லை எவ்வித காரணமும் இல்லாமல் நிரபராதிகளை கடத்தி படுகொலை செய்துவிட்டு பின் மூடி மறைப்பதற்காக புதைத்துவிட்டு அவர்களின் சதிச்செயல் அம்பலமானதும் நீலிக்கண்ணீர் வடிக்கும் போலிக் கும்பலினை மக்கள் நிச்சயம் இனம் கண்டு கொள்வார்கள்.

***ஏன் இந்தப படுகொலை !***

அந்த ஊரில் எமது இயக்கத்தின் வளர்ச்சியின் ஆற்றாமையா ! அல்லது பழிவாங்கலா அல்லது வஞ்சம் தீர்க்கும் செயலா அல்லது கொலை வெறியா ? எதுவாயினும் வன்முறையிலேயே அணுக விரும்பி யிருந்தால் அதற்கு ஆயுதம் தரித்த எமது இயக்கதினரையே எதிர் கொண்டிருக்க வேண்டும். எமது இயக்க அனுதாபிகளை பாதுகாப்பு அற்றவர்களை நிராயுதபாணிகளை படுகொலை செய்வது மனிதாபிமானமற்ற கோழைச் செயலாகும்.

பயங்கரவாத சதிக் கும்பலின் இத்தகைய கோழைத்தனமான செயல் எமக்கு புதிதான ஒன்றல்ல. 1982 இல் எமது இயக்க தீவிர ஆதரவாளர்களான அளவெட்டியைச் சேர்ந்த இறைகுமாரனையும். உமை குமாரனையும் இதே பாணியிலேயே படுக்கையில் வைத்து கடத்திச் சென்று குரூரமாக கொலை செய்துவிட்டு வஞ்சமௌனம் சாதித்து வருகின்றனர். இவ் அடாவடிச் செயலின் சூத்திரதாரிகள் யாரென்பதை மக்கள் இனங்கண்டு கொண்டதைப் போல் இம் முறையும் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடமும் கொலை காரரைப் பற்றி எமக்கிருக்கும் முன்னனுபவமும் வேறு பல உறுதியான சாட்சியங்களும் கொலைகாரரை எமக்கு இனம் காட்டுகின்றன.

உதட்டளவில் ஒற்றுமையை பற்றிப்பேசி வேஷம் போடுவதுடன் மட்டும் நின்றுவிடாமல் விடுதலைப் பயணத்தை நாசப்படுத்தும் இவ்வாறான செயல்களுக்கு மௌனம் சாதிப்பதனூடாக மன்னிப் பளிக்க நாம் தயாரில்லை. நரவேட்டையாடும் இந்த சதிக்கும்பல் மனிதநேயம் அற்றவர்கள் மிருகத் தனமானவர்கள். மக்கள் விடுதலையை பற்றிப் பேசிப்பேசி விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும புல்லுருவிகளின் கயமைத்தனம் மக்களால் அடையாளம் காணப்படும்.

தமிழ் மக்கள் இப் படுகொலைச் சம்பவங்களால் அதிருப்தியுற்று மனம் தளர வேண்டியதில்லை, இத்தகைய துரோகச் செயல்கள் தொடர்ந்தும் அனுமதிக்கபட முடியாதன. அதே சமயம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்கும் உறுதியான செயற்பாடும் மனோதிடமும் எமக்குண்டு துரோகிகளை தனிமைப்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தருவார்கள் என்பது திண்ணம்.

அநாதரவாக படுகொலை செய்யப்பட்ட எமது சகோதரர்களே ! உங்களின் சடலங்களை பார்த்து நாம் நிலை தடுமாறப் போவதில்லை. மாறாக உங்கள் படுகொலைகள் எம் உத்வேகத்தையும் உற்சாகத்தை யும் அதிகரிக்கவே செய்யும். உங்கள் தியாக சரித்திரத்தால் ஆயுதம் ஏந்தும் எமது கரங்கள் உண்மையான விடுதலையை வென்றெடுக்கும்.

மேற்படி பிரசுரம் ''தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்'' தலைவர் வே. பிரபாகரனின் கையொப்பமுடன் வெளியிடப்பட்டுள்ளது.

## இந்தியப் பாட்டாளி வர்க்கமே எழுக !

## அமெரிக்க, சிறீலங்கா அரசுகளுக்கு எதிரான போராட்டங்கள் வெடிக்கட்டும்

ஈழமக்கள் படுகொலைச் செய்யப்படுவதைக் கண்டிக்கும் முகமாக **இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்** மத்திய நிர்வாக குழு உறுப்பினர் **தோழர். எம். கல்யாண சுந்தரம்** பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள ஆங்கில அறிக்கையின் தமிழாக்கம் பின்வருமாறு:

டிச. 8: சிறீலங்காவில் தமிழ்ப் பிரதேசத்திலும் வடக்குப் பகுதிகளிலும் இந்தியாவிற்கு இடைப்பட்ட பாக் ஜலசந்திப் பகுதியிலும், ஏகாதிபத்தியச் சார்பு சிறீலங்கா யு. என். பி. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் இந்திய மக்களைப் பெரிதும் ஆத்திர மூட்டுவதாகவும் இந்தியாவுடன் பகைமை பாராட்டும் தன்மையதாகவும் இருக்கின்ற காரணத்தால், இந்திய மக்கள் அனைவரது கவனத்தையும் ஈர்ப்பதாய் உள்ளது.

சமீபத்தில் இந்திய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப் பட்டுள்ளன. இந்திய மீனவர்கள் கடுமையான அச்சத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இது இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத் தில் பாகிஸ்தான் செய்த 'எல்லை மோதல்' ஆத்திரமூட்டல்களை ஒத்ததாய் இருக்கிறது.

www.tamilarangam.net



திடீரென உருவாக்கப்பட்டுள்ள இப்பதட்ட நிலைக்குப் பின்னணியான காரணங்களும் உள் நோக்கங்களும் தெற்காசியப் பிராந்தியம் முழுவதிலும் அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் கடுமையான ஊறுவிளைவிக்கும் என்பது கவனத்திற்குரியது ஆகும்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரீகன் வெற்றி பெற்றிருப்பதும், இந்தியாவில் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்டிருப்பதும் ஜெயவர்த்தனாவின் ராணுவ பயங்கரவாத அரசுக்குத் துணிச்சலைக் கொடுத்திருக்கின்றது. அதனால்தான் இந்தியாவை ஆத்திர மூட்டிட வேண்டி, தமிழ் மக்களுக்கெதிரான இனப்படுகொலை வெறியாட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

சுமார் 400 கிலோ மீட்டர் நீளமுள்ள வடக்குக் கடலோர பிராந்தியம் முழுவதிலும் வசித்து வந்த மக்கள் அனைவரும்-பெரும் பகுதி மீனவமக்களது- வாழ்க்கை நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. இருக்க இடமும் பிழைக்க வேலையும் இன்றி மக்கள் துயரத்தில் தள்ளப்பட்டுள்ளனர். மேலும் இப் பிராந்தியத்தில் முக்கியமான மையங்கள் அனைத்திலும் ராணுவம் கண்ணி வெடிகளை நிறுவியுள்ளது. இது மக்கள் நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களைப் பொய்க் காரணங்களைக் கூறிக் கொன்று குவிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்க்குடிகள் பெரும்பான்மையாக வாழக்கூடிய பிரதேசம் முழுவதையும் ராணுவம்வளையமிட்டுச் சுற்றி வளைத்திருப்பதன் மூலம் தமிழர் வாழும் பிரதேசத்தைச் சிறீலங்காவின் மற்றைய பிரதேசத்திலிருந்து முற்றிலுமாகப் பிரித்து வைத்துள்ளனர். இதன் காரணமாகப் பத்து லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் ஹிட்லர் பாணி வதைமுகாம் சூழ்நிலையில் (concentration camp) வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களுக்குப் போக்குவரத்து வசதியோ, உணவோ, வேலையோ எதுவுமே கிடைப்பதில்லை. வங்கிகளும் பண்டகசாலைகளும் மூடப்பட்டுக் கிடக்கின்றன. இது, தமிழ் மக்கள் தொகை முழுவதையும் படிப்படியாகச் சாக அடிப்பதற்கென்றே செய்யப்பட்டுள்ள திட்டமிட்ட சதியாகும்.

இலங்கை தீவைச் சிங்களப் பெரும்பான்மை ஆதிக்க நாடாக மாற்றிக் கொள்ளும் பொருட்டு, எல்லா விதநவீனரக ஆயுதங்களும் நுணுக்கமான புரட்டு வழி முறைகளும் கையாளப்படுகின்றன. இப்படிப்பட்ட அக்கிரமங்களையும் மனிதத் தன்மையற்ற நடவடிக்கைகளையும் உலகத்தின் கண்களில் இருந்து மறைப்பதற்காக, இந்தியாவுக்கு எதிரான அவதூறுப் பிரச்சாரம். கட்டவிழ்த்து விடப்படுகிறது. இந்தியா தேர்தலில் ஆழ்ந்திருப்பதால், இப்படிப்பட்ட இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றிப் போதிய கவனம் செலுத்த முடியாது என ஒரு வேளை ஜெயவர்த்தனே அரசாங்கம் நினைக்கிறது போலும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக ‘அனைத்துக் கட்சி மாநாடு’ என்று சொல்லப்பட்டது முடங்கி உறைந்து போய் விட்டது.

இப்படிப்பட்ட ஆத்திர மூட்டல் சம்பவங்கள் பற்றி இந்தியா கவலை தெரிவித்தால் மட்டும் போதாது. இத்தகைய அக்கிரமங்களை சிறீலங்கா அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும். அல்லது விளைவுகளைச் சந்திக்க வேண்டும். இனியொரு போதும் இது சிறீலங்காவின் உள்விவகாரமாகாது. இந்த நடவடிக்கைகள் யாவும் வெளிப்படையான இந்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதாயும், இப்பிராந்தியத்தில் நடக்கும் ஏகாதிபத்திய ஆதரவு சூதாட்டத்தை மறைக்கும் தன்மையதாயும் உள்ளன. இந்தியாவிலுள்ள சகல ஜனநாயக தேசபக்த சக்திகளும் இதனை அழுத்தமாகக் கண்டிக்க வேண்டும். மேலும் வதை முகாம்களிலுள்ள மக்களுக்கு உணவு முதலிய வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களை உடனடியாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

சிறீலங்கா மனித உரிமைகளைக் காத்திடவும், சமாதானத்தை நிலைநிறுத்தவும், சர்வதேச சமாதான சக்திகளின் ஆதரவைத்திரட்டும் வகையில் இந்திய அரசாங்கம் சகல முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இந்தியப் பாட்டாளி வர்க்கமும் இந்தியாவிலுள்ள சகல தொழிற்சங்க அமைப்புக்களும், சிறீலங்காவுக்கும் அமெரிக்க ஏகாதிபத்திற்கும் எதிரான ஒருமைப்பாட்டு ஆர்ப்பாட்டங்களை, இந்தியாவுள்ள இலங்கை ஹைகமிஷனர் அலுவலகம் முன்பாகவும், அமெரிக்கத்தூதரகம் முன்பாகவும் நடத்தவேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### *சிறீலங்கா இரகசியப் பொலீசார் கடத்தப்பட்டனர்*

நாச்சிமார் கோவிலடியில் கைது செய்யப்பட்ட தமது 3 உறுப்பினர்களையும் விடுதலை செய்ய வேண்டும்; ஒரு கோடி ரூபா ரொக்கப்பணம் அமிர்தலிங்கத்தினூடாக தங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்னும் கோரிக்கைகளையும் முன்வைத்து ஈழ விடுதலைக்காக இயங்கிவரும் அமைப்பொன்று 5 சிறீலங்கா இரகசியப் போலீசாரையும், ஒரு பத்திரிகை ஆசிரியர் உட்பட நால்வரையும் கடத்திச் சென்றது. இக்குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்தவோ அல்லது அவர்களது கோரிக்கைகளை ஏற்கவோ சிறீலங்கா அரசு முன்வராததினால் காலக் கெடு முடிவடைந்ததும் கடத்தப்பட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

### *மன்னாரில் சிறீலங்கா இராணுவ வெறியாட்டம்*

### *பேருந்துகளுடன் மக்களைக் கடத்திச் செல்கின்றனர்!*

டிச. 4: மன்னாரில் தள்ளாடி சிறீலங்கா இராணுவ வதை முகாமிலுள்ள இராணுவத்தினர் அவ்வழியால் செல்லும் வாகனங்களை மறித்துப் பிரயாணிகளை மிலேச்சத்தனமாகத் தாக்குவதுடன் அவர்களது பெறுமதிமிக்கப் பொருட்கள் சிலவற்றையும் அபகரிக்கின்றனர். அண்மையில் இரு தமிழ்ப் பெண்கள்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உட்பட 12 பேருடன் சென்று கொண்டிருந்த பேருந்து வண்டியை சிறீலங்கா இராணுவத்தினர் இடை மறித்து எங்கோ கடத்திச் சென்றுள்ளனர். இவர்களுக்கு என்ன நடந்ததென இதுவரை தெரியவில்லை.

6-12-84 அன்று முருங்கன்-மன்னார் வீதியில் சிறீலங்கா இராணுவத்தினர் சென்று கொண்டிருந்த 'ட்ரக்' வண்டியொன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. இச்சம்பவத்தின் போது 'ட்ரக்' சாரதி மரணமானதுடன் 9 சிறீலங்கா இராணுவத்தினர் காயமடைந்தனர்.

## ஈழப் பெண்கள் நிர்வாணமாக்கப்படுகிறார்கள் !

டிச 8: 42 மணி நேர ஊரடங்குச் சட்டத்தின் போது சிறீலங்கா ராணுவக் கூலிகள் கைதடி, நவாலி ஆனைக் கோட்டை ஆகிய இடங்களைச் சுற்றி வளைத்துத் 'தேடுதல் நடவடிக்கை' என்ற பெயரில் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இவர்களது வழக்கமான தேடுதல் நடவடிக்கைகளான பொது மக்களை மிரட்டுதல், அடி உதைகளைத் தாராளமாக வழங்குதல் கற்பழித்தல், மக்கள் உடைமைகளையெல்லாம் உடைத்து நொறுக்கி வெளியே வீசுதல், துப்பாக்கிகளால் மிருகத்தனமாய் இடித்து, இழுத்து 'ட்ரக்'குகளில் திணித்தல், பயந்து ஓடும் மக்களைச் சுட்டு வீழ்த்துதல் போன்றவற்றை இங்கேயும் நடத்தினர். இத்தாக்குதலின் போது மொத்தமாக 155 பேர் கைது செய்யப்பட்டனர். ஆனைக் கோட்டையில் மட்டும் 27 பெண்கள் கைது செய்யப்பட்டு எங்கோ அழைத்துச் செல்லப்பட்டனர். இதில் ஒரு பெண்மணி ராணுவக் குண்டர்களுடன் போக மறுக்கையில், சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழித்து நிர்வாணமாக்கி, கட்டிப் பிடித்து 'ட்ரக்'கில் ஏற்றிச் சென்றனர்.

## ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள், யுவதிகள்
## சிறீலங்கா வதை முகாமில்

டிச 9: ஈழதேசத்தின் பல பகுதிகளிலும் 'தேடுதல் வேட்டை' என்ற பெயரில் சிறீலங்கா இராணுவம் ஈழமக்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்தும், ஈழப்பெண்களைக் கற்பழித்தும், ஈழவாலிபர்களைக் கைது செய்தும் வருகின்றது. உலகின் எப்பாகத்திலும் நடைபெற்றிருக்காத வகையில் கொடுமைகளுக்கும் இன்னல்களுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள் ஈழமக்கள். பச்சிளம் பாலகன் முதல் மரணத்தை எதிர் நோக்கியிருக்கும் வயோதிகர் வரை அனைவரும் இனவெறிபிடித்த இராணுவத்தினரின் பார்வையில் 'பயங்கரவாதி' களாகவே தென்படுகின்றார்கள். கைது செய்யப்படும் ஈழவாலிபர்கள் காங்கேசன் துறைமுகத்தில் வைத்துக் கப்பலில் ஏற்றப்பட்டுச் சிறீலங்காவிலுள்ள 'பூசா' போன்ற வதை முகாம்களிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள். இதுவரை 7000திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பின்னர் பல 'டிரக்' வண்டிகளில் வந்த பெருந்தொகையான சிறீலங்கா இராணுவம் முருங்கன், பறப்பாங்கண்டல், உயிலங்குளம் ஆகிய இடங்களிலுள்ள ஏழை விவசாயிகளினது குடிசைகளைத் தீயிட்டுச் கொளுத்தியது. இச்சம்பவத்தின் போது பல ஆடு, மாடுகளும் எரிக்கப்பட்டன. ஈவிரக்கமின்றி பாலகர்கள் முதல் முதியோர்கள் வரை துப்பாக்கியால் சுடப்பட்டனர். இதில் 123 பேர் கொல்லப்பட்டனர். 86 பேர் மன்னார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்தனர்.

## 'தொண்டர்படை' என்ற போர்வையில் இனவெறிக் குண்டர்கள்

டிச 9: சிறீலங்கா இனவெறி அரசானது படிப்படியாகத் தன் அடக்குறை நடவடிக்கைகளை விஸ்தரித்து வருகிறது. இதில் ஒரு கட்டமாக இப்போது ஈழமக்களை நசுக்குவதற்காகத் தொண்டர் படை என்ற பெயரில் சிங்கள இனவெறிக் காடையர்களைக் கொண்ட ஒரு படையை ஆயுதங்களோடு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது. 'கஜபாகுஅணி' என்றழைக்கப்படும் இந்தக் சிங்களக் காலிப்படை விடுதலைப் போராளிகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கொலை செய்யவென துப்பாக்கிகளோடு ஈழப்பிரதேசத்தினுள் நுழைந்துள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில், இரவு நேரங்களில் இந்த வெறியர்கள் துப்பாக்கியால் கண்டபடி சுட்டு ஒலி கிளப்பித் தமிழ் மக்களை மிரட்டி வருகின்றனர். துப்பாக்கியோடு திரிகின்ற சிங்கள ராணுவத்தினர் ஈழமக்களுக்குச் செய்யும் இம்சைகள் போதாதென்று கருதியோ என்னவோ, ஜெயவர்த்தனேயின் அரசு, கலவரம் செய்கிற காலிகளிடமும் துப்பாக்கிகளை வழங்கியிருக்கிறது. இந்தக்காலிகள் இரவு நேரங்களில் தமிழர் வீடுகளுக்குச் சென்று கதவுகளைத் தட்டி எழுப்பி, அடித்து நொறுக்கி மிரட்டி ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். வீடுகளிலுள்ள உடைமைகளைக் கொள்ளையடித்துக் கொண்டு செல்கின்றனர். இவர்கள்தான், தீவிரவாதிகள் வீடுகளில் ஒளிந்திருக்கினறார்களா என்பதைச் சோதனையிடுகின்றவர்களாம். முல்லைத்தீவிற்கு வந்த இந்தக் குண்டர் படையின் மற்றொரு பிரிவினர், பொதுமக்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டதில் 18 அப்பாவி மக்கள் இறந்து போயினர்; 40 பேர் காயங்களுடன் தப்பினர். மற்றும் காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளிலும் இப்படையின் மற்றொரு பிரிவினர் வெறிகொண்டு சுட்டதில் 14 பேர் துடிதுடித்து மாண்டனர்.

முல்லைத்தீவில் முகாமிட்டுள்ள இந்தச் சிங்களக் குண்டர்களுக்கு, கடலில் கண்ணி வெடிகளை வைப்பது பற்றி இஸ்ரேலிய கூலிப்படையைச் சேர்ந்த (மொசாட்) 12 அதிகாரிகள் பயிற்சியளித்து வருகின்றனர். விடுதலைப் போராளிகளின் நடமாட்டத்தை கடலில் ஒழித்துக்கட்டுவதற்காக, கடல் கண்காணிப்பு வலயப் பகுதிகளில் கண்ணி வெடிகளைப் பொருத்துவதற்காகவே இவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது.

www.tamilarangam.net



### வயல் வெளிகளில் பிணக்குவியல்கள்

டிச 10: ஈழமக்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற எண்ணத்துடன் ஈழதேசத்தில் செயற்பட்டுவரும் சிறீலங்கா கூலிப்படையினர், 10-12-84 அன்று தொடக்கம் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தின்போது தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்துள்ளனர். மாதகல், பண்டத்தரிப்பு, பனிப்புலம், ஆகிய இடங்களைச் சுற்றிவளைத்துத் 'தேடுதல் வேட்டை' நடத்தினர். இத்தேடுதல் வேட்டையின்போது வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள்; தனியார் மினி பஸ்கள், கவசவாகனம், ஜீப்புகள், 'ட்ரக்'குகள் ஆகியவற்றில் வந்திருந்தனர். கிராமங்களின் நான்கு திசைகளிலுமிருந்து பயங்கர ஆயுதங்களுடன் வந்த இக் கொலைபாதகர்கள், அக்கிராம மக்களை எதுவித ஈவிரக்கமுமின்றி நாய்களைச் சுடுவதைப் போல் சுட்டுத்தள்ளினார்கள். இதனால் கிலிகொண்ட பாலகர்கள் முதல் முதியோர் வரையிலானவர்கள் செய்வதறியாது நாலாதிசையும் சிதறி ஓடினார்கள். அச்சமயம் இரண்டு ஹெலி கொப்டர்களில் வந்த சிறீலங்கா விமானப்படைப் பயங்கரவாதிகள் சிதறி ஓடிய மக்கள் மீது சரமாரியாகச் சுட்டனர் இதனால் பலர் உயிரிழந்து வயல் வெளிகளில் சுருண்டு வீழ்ந்தனர். கொலை வெறிவர்களிடமிருந்து தப்பிக் கொள்ள முடியாது பதறி ஓடிப் பலியான அப்பாவி மக்களின் அவலம் விபரிக்கவே முடியாதது.

சிதறி ஓடிய மக்கள், இரண்டு நாட்களாக வயல் வெளியில் சேற்றுக்குள் நத்தைக் கடியையும் சகித்துக் கொண்டு படுத்திருந்து, ஈச்சம் பற்றைகளினுள் ஒளித்திருந்தவர்கள் முட்களின் கீறல் வேதனையையும் தாங்கிக்கொண்டு வெளியில் வராமலும், காஞ்சோண்டிப் பற்றைக்குள் படுத்திருந்தவர்கள் உடம்பில் நஞ்சேறியும் வெளியே வராமலும், சாப்பிட உணவில்லாமலும் உணவுப் பொருட்கள் இருந்து சமைத்தும் சாப்பிட முடியாமலும் இருந்த கொடூர வதைகளை அறியும் நெஞ்சங்களே பதறிப் போகின்றன.

இத்தாக்குதலுக்கு ராணுவக் கூலிகளை ஏற்றி வந்திருந்த ஒரு கவசவாகனமும், அரச பேருந்தில் மாதகலுக் கருகாமையிலுள்ள திருவடி நிலையில் சேற்றுக்குள் புதைந்து இன்னும் எடுக்கமுடியாத நிலையிலுள்ளது. இதை 300க்கு மேற்பட்ட கூலிப்படையினர் காவல் புரிந்துகொண்டு, மக்களை மிருகத்தனமாகத் தாக்கி வருகிறார்கள். 62 மணித்தியால ஊரடங்குச் சட்டத்தின் போது 750க்கு மேற்பட்டோர் கைது செய்யப்படுள்ளனர்

### ஈழத்தில், சிறீலங்கா அரச பயங்கரவாதத்தை நிறுத்துக!

### சிறீலங்கா அரசுக்கு ராஜீவ்காந்தி எச்சரிக்கை

டிச 12; "சிறீலங்கா அரசானது அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்து வருவதையும், இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடித்து வரும் தமிழக மீனவரைச் சுட்டுக் கொலை செய்வதையும் உடனடியாக நிறுத்த வேண்டும்" என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ஜெயவர்த்தனே அரசைக் கடுமையாக எச்சரித்துள்ளார். 'பாதுகாப்பு பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள யாழப்பாணத்தில் இனவெறியாட்டத்தில் இரத்தக் கறைபடிந்த சிங்கள ராணுவமும் கொடூர ஆயுதங்களும் குவிக்கப்பட்டு, போரில் முற்றுகையிடப்பட்ட இடம்போல் ஆக்கப்பட்டுள்ளது. ராணுவத்தினருடன் சேர்ந்து சிங்களக் காடையர்களும், தமிழர்களைக் கண்ட கண்ட இடங்களில் சுட்டுக் கொலை செய்யும் மிருகவெறி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது, இப்போர்க்கால நிலைமைகளால் யாழ்ப்பாணம் மயான பூமியாக்கப்பட்டுள்ளது. இங்கு உணவு தானியங்களை அனுப்புவதையும் சிறீலங்கா அரசு நிறுத்திவிட்டது. இதனால் உணவு கிடைக்காமல் பெண்கள்—குழந்தைகள் உட்பட 9 லட்சம் மக்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

வடபகுதியில், அரசபயங்கரவாத வெறிச் செயல்களை உடனடியாக நிறுத்தி விடும்படி கூறியிருப்பதோடு, அங்கு பட்டினியால் வாடும் மக்களுக்கு உணவளிக்க சிறீலங்கா அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காதிருப்பதையும், புது டெல்லியிலுள்ள சிறீலங்கா தூதர் திலகரத்னாவிடம் அளிக்கப்பட்ட கண்டனச் செய்தியில் ராஜீவ் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

பாக் ஜலசந்தியில் கண்காணிப்பு மண்டலம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதோடு, அங்கு குவிக்கப்பட்டுள்ள சிறீலங்கா கடற்படையினரால் அப்பாவி இந்திய மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள்; துன்புறுத்தப்படுகிறார்கள்; பிடித்துச் செல்லப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப் படுகிறார்கள். கடந்த சில வாரங்களில் பல இந்திய மீன்பிடி படகுகளைப் பிடித்துச் சென்றுள்ளனர், சிலவற்றை மூழ்கடித்துள்ளனர். மீனவர்களைக் கைது செய்து துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்" என்றும் அதில் கூறியுள்ளார்.

### தமிழக மீனவர்கள் சுட்டுக் கொலை

டிச 12: தீவிரவாதிகளைப் பிடிப்பதற்கென இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயான பாக் நீரிணையில், தன் கடற்படையைக் குவித்திருக்கும் சிறீலங்கா அரசாங்கம், நீரிணையைக் கடற்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்திருக்கிறது. இப்பகுதியிலே பெரிதும் நடமாடி வரும் சிறீலங்கா இனவெறி அரசின் கடற்படையினர், ஈழப் போராளிகளைப் பிடிக்க முடியாத ஏமாற்றத்தில் அப்பாவி மீனவர்களுக்குப் பெருந்துன்பம் இழைத்து வருகின்றனர். ஈழ மீனவர்களை மட்டுமல்ல, தமிழ்கத்தைச் சேர்ந்த மீனவர்களையும் இந்தியக் கடல் எல்லைக்குள்ளேயே சென்று சரமாரியாகத் துப்பாக்கிகளால் சுட்டும், படகுகளுக்குத் தீயிட்டுக் கவிழ்த்தும் அப்பாவித் தமிழக மீனவர்களைச் சிறைப்பிடித்துச் சித்திரவதை செய்து துன்புறுத்தியும் வெறியாட்டம் ஆடி வருகிறார்கள். தங்கள் சொந்தக் கடற் பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்குக் கூட பாதுகாப்பற்றுப் பயப்பிராந்தியுடன் செல்ல வேண்டிய நிர்ப்பந்ததில் தமிழக மீனவர்கள் தவிக்கிறார்கள்.

சிறீலங்காவின் கடற்படை குண்டர்கள் துப்பாக்கி முனையில் தமிழக மீனவர்களிடமிருந்து மீன்களைக் கொள்ளையடித்துச் செல்வதையும், மீனவர்களைச் சித்திரவதைக்குள்ளாக்கிச் சிரித்து

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ரசிப்பதையும், பலரைச் சிறைபிடித்துச் சென்று கொடுமைப்படுத்தி அடாவடித்தனமாக வெறிகொண்டு அலைவதையும் எதிர்த்து, இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், கிளர்ச்சி மறியல்களும் செய்து, இந்திய அரசுக்குத் தம் இன்னல்களைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்கள்.

இந்தியக் கப்பல்களைச் சுட்டு மூழ்கடித்து, தமிழக மீனவர்களைத்தாக்கி வரும் சிறீலங்கா அரசின் இந்தப் போக்குக்கு, இந்தியா தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இதன்பிறகும், சிறீலங்கா கடற்படையினரால், தமது இனவாதக்கொலைவெறிக் கரங்களைச் சும்மா வைத்துக் கொண்டிருக்க முடியவில்லை. ராமேஸ்வரம் கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்களை நோக்கி, இவர்கள் சரமாரியாகச் சுட்டத்தில் முனியசாமி (வயது20) என்ற தமிழக எரகாடு கிராமத்தைச் சேர்ந்த வாலிபர் பலியானார். பலர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

### பெருந்தோட்டப் பாட்டாளிகளினது முகாம்கள் சிறீலங்கா கூலிபட்டாளத்தினரால் தீக்கிரை

டிச 13: காடாகக் கிடந்த மலையகத்தை தமது கடின உழைப்பினால் வளமாக்கி, தேயிலைச் செடிகளிற்கு தமது உடலையே உரமாக்கி மலையகத்தைச் செழுமையுறச் செய்தவர்கள் மலையகப் பெருந்தோட்டப் பாட்டாளிகள். உலகிற்கெல்லாம் பௌத்த தர்மத்தைப் பற்றி வாய்கிழியக் கத்திவரும் கொலை வெறியன் ஜெயவர்த்தனாவின் அனுசரணையுடன் 1977 ஆம் ஆண்டு நடந்த இனக்கலவரத்தின்போது இரத்தவெறிபிடித்து அலையும் சிங்களக் காடையர்களால், மலையகத்திலிருந்து அடித்து விரப்பட்ட, இம் மலையகமக்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாப் பகுதிகளிற்கு அகதிகளாக வந்து சேர்ந்து அங்கு அமைக்கப்பட்ட அகதிகள் முகாம்களில் வாழ்ந்து வந்தனர். ஈழத்தின் எல்லையில் அமைந்திருந்த ''டொலர் பாம்,'' ''கென் பாம்'' ஆகிய பண்ணைகளில் வாழ்ந்து வந்த மலையகமக்கள் சிங்களக் குண்டர்களினால் அடித்து விரட்டப்பட்டனர். சிங்களக் காடையர்களினால் அடித்துவிரட்டப்பட்ட மலையக மக்கள் பெரியகட்டிலுள்ள ஐந்து முகாம்களில் வாழ்ந்துவந்தனர். இவர்களிற்கு பெரியகட்டுப் பகுதியிலுள்ள பாதிரியார் ஒருவரும் பொதுமக்களும் மிகவும் ஆதரவாய் இருந்தனர். இவர்கள் அங்கு வாழ்வதையும் ஜீரணிக்க முடியாத கொலைவெறி பிடித்து அலையும் சிறீலங்கா ராணுவம், அன்று பெரியகட்டிலுளள ஐந்துமுகாமகளையும் தீயிட்டுக் கொளுத்தியதுடன், முகாம்களில் வசித்துவந்த மலையகத்தமிழ் மக்களையும் ஓட ஓடவிரட்டியடித்துள்ளது. திக்குத்தெரியாமல் சிதறி ஓடிய இவர்களில் சிலரை இன்னும் காணவில்லை.

### இலங்கைத்தமிழர் பிரச்சினையை இந்தியா புறக்கணிக்க முடியாது-ராஜீவ்காந்தி

டிச. 14 ''கைகள் பின்னுக்குக் கட்டப்பட்ட நிலையில் கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் புகைப் படத்தை நான் பார்த்தேன். இந்தமாதிரி நிலைமை நீண்டநாள் நீடிக்கமுடியாது. என்பதை இலங்கை அரசு உணரவேண்டும்'' என்று கோவையில் நடைபெற்ற கூட்டமொன்றில் இந்தியப்பிரதமமந்திரி ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது : இலங்கையில் கடந்த சில நாட்களாக நடந்துவரும் சம்பவங்கள் கவலை அளிப்பதாக உள்ளன. இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதே விவேகமானது. தீவிரவாதிகள் ஒழிப்பு வேட்டை எந்தவகையிலும் உதவப்போவதில்லை என்பதை இலங்கை அரசு உணரவேண்டும். இலங்கையில் நிலவும் 'கலக்கமளிக்கும்' நிலைமையினால் வம்சாவழித் தமிழர்கள், நாடற்றதமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்தியாக்கு ஏராளமானபேர் அகதிகளாக வரும் நிலைமை உருவாகியுள்ளது. இதை நாம் புறக்கணித்துவிட முடியாது. ஏனென்றால் இந்தப்பிரச்சனை நம்மைவிட்டு ஒதுங்கிவிடுபவையாக இல்லை என்றார்.

மேலும் அவர் கூறுகையில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தமிழ்நாட்டு மக்களின் பிரச்சனை மட்டுமல்ல-அது ஒவ்வொரு இந்தியனின் பிரச்சனையாகும் என்றார்.

### பாதிரியார் படுகொலை

டிச. 14 ஜீவோதயம் என்ற பண்ணையை நடத்தி சமூக சேவையில் ஈடுபட்டு வந்த பாதிரியார் ஜார்ஜ் ஜெயராஜசிங்கம் உட்பட மூவர் சிறீலங்கா ஆயுதப்படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சம்பவதினம் பாதிரியார் ஜெயராஜசிங்கமும் ஒரு தமிழ் போலீஸ் அதிகாரியும் இன்னுமொரு இஸ்லாமிய தமிழரும் மன்னாரை நோக்கி காரில் வந்துகொண்டிருந்த சமயம் திருக்கேதீஸ்வரம் சந்தியில் வைத்து சிறீலங்கா ஆயுதப்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தின்போது போலீஸ் அதிகாரி உடன் மரணமானார். ஏனைய இருவரும் காயமடைந்தனர். இரத்தவெறிபிடித்து பேய்போல் அலைந்து திரியும் ஆயுதப்படையினர் காருக்குள் பெற்றோலை ஊற்றி உயிருடன் தீ மூட்டினர் கருகிச் சுருண்ட நிலையில் இவாகளது சடலங்கள்காணப்பட்டன.

சிறீலங்கா இனவெறி அரசின் வானொலி பாதிரியார் உட்பட மூவரின் படுகொலைக்கும் தீவிரவாதிகளே காரணம் எனறு அறிவித்துள்ளபோதிலும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் சிறீலங்கா அரசின்மீது பெருஞ்சீற்றங்கொண்டுள்ளனர்.

### ''சிறீலங்கா அரசு ; தமிழ், சிங்களவர்களுக்கெதிரான பாசிச அரசு—''

டிச 14 ஜெயவர்த்தனா தலைமையிலுள்ள சிறீலங்கா அரசு தமிழ்மக்களுக்கு மட்டுமல்லாது சிங்கள மக்களுக்கும் எதிரான ஒரு பாசிச அரசு என்று பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரி ஆசிரியர் சங்கங்களின் அகில இந்திய சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் மிர்ன்மாய் பட்டாச்சாரியா தெரிவித்தார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


'யுனெஸ்கோ' சார்பில் 'மனித உரிமைகள்' 'அடிப்படை சுதந்திரம்,' மற்றும் 'கல்விமூலம் அமைதி' ஆகிய விஷயங்கள் குறித்து நடந்த கருத்தரங்கத்தில் கலந்துகொள்ள திரு. பட்டாச்சாரியா இலங்கை சென்றிருந்தார். இந்தியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்த கருத்தரங்கத்தை நடத்தவிடாமல் செய்ய சிறீலங்கா அரசுபெரும் முயற்சி செய்தது என்று பட்டாச்சாரியா தெரிவித்தார்.

பணவீக்கத்தால் ஏற்பட்ட விலைவாசி உயர்வு, வேலையில்லாத்திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளை தீர்க்கமுடியாத இலங்கை அரசு 'நாட்டைக்காப்பற்றுங்கள்' என்ற கோஷத்தைச் கிளப்பி மக்களை திசைதிருப்புகிறது. இதே வழியில் சென்றால் இலங்கையின் கொள்கைகள் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பாதகத்தை விளைவிக்கும். இந்திய படையெடுப்பு போன்ற பொய்ப்பிரசாரத்தை கட்டவிழித்துவிட்டு எவ்வளவு நாட்கள் முடியுமோ அவ்வளவு நாட்களவரை ஆண்டுவிட்டு செல்லலாம் என்ற நோக்கத்தில் இலங்கைத் தலைவர்கள் செயல்படுகிறார்கள் என்றும் பட்டாச்சாரியா தெரிவித்தார் கொழும்பில் விடுதலைப்புலிகள் வருகிறார்கள் என்று பீதியை கிளப்பும் சுவரொட்டிகளை அந்த அரசே அச்சிட்டு ஒட்டிய சம்பவம் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இலங்கை அரசை அந்த நாட்டின் ஆசிரியர்கள் உள்ளிட்ட அறிவாளி பகுதியினர் கடுமையாக விமர்சித்து வருவதாகவும் கூறினார்.

### தமிழ் மாணவர் கல்விக்குப் பாசிச அரசு வேட்டு வைக்கிறது

டிச 15: சர்வதேச அரங்கில் சிறீலங்கா அரசின் இனவெறிக் கொள்கை புட்டுக்காட்டப்பட்டு வருவதை சகித்துக்கொள்ள முடியாத சிறீலங்கா இனவெறி அரசு குறுக்கு வழிகளைக் கையாண்டு தனது கொலை பாதகச்செயல்களை மூடிமறைப்பதற்கு முயன்றுவருவதுடன் தேசவிடுதலை எனும் உயிர் நோக்குடன் போராடி வரும் ஈழவிடுதலைப் போராளிகளை 'பயங்கரவாதிகள்' என முத்திரை குத்த முயற்சி மேற்கொண்டுவருகின்றது.

பரீட்சை எழுதுவதற்காக பேனாவுடனும் பென்சிலுடனும் சென்றுகொண்டிருந்த இரு நூறுக்கும் மேற்பட்ட ஈழமாணவர்களை சிறீலங்கா இராணுவம் கைது செய்து, இராணுவமுகாமிற்கு கொண்டு சென்று அவர்களிடம் நவீன துப்பாக்கிகளை கொடுத்து வீடியோ (video) படம் எடுத்துள்ளது. நவீன ஆயுதங்களுடன் ''பயங்கரவாதிகள்'' கைது செய்யப்பட்டனர் என்று பொய்ப்பிரச்சாரம் செய்வதற்காகவே இவ்வாறுபடங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவில் நூற்றுக்கணக்கான தமிழர்களைக்கொன்று குவித்தசிறீலங்கா இராணுவம் தமிழர்களது பிணங்களைப்படம் பிடித்து அவைகள் தீவிரவாதிகளினால் சுட்டுக்கொலைசெய்யப்பட்ட சிங்களவர்களினது பிணங்கள் எனப்பொய்ப்பிரச்சராம் செய்து ஈழவிடுதலை போராளிகளை 'பயங்கரவாதிகள்' என உலகநாடுகளிற்கு காட்டும் முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

### கொலைப்படைகளின் குரூர ரசனை

டிச 14 அன்று மாதகலைச் சேர்ந்த இசைமணி (வயது 50) அன்றைய சாப்பாட்டுக்கு எதுவுமே இல்லாததால் வீச்சுவலை எடுத்துக்கொண்டு கடற்கரை நோக்கிச் சென்றார். அங்கு திடீரென்று வந்த ராணுவக்குண்டர்கள். அந்த வயோதிபரைப் பார்த்து, ''டேய் இங்கு வா'' என்று கூப்பிட்டு ''எங்கேடா போறாய்?'' என்று மிரட்டினர். பின்பு அப் பெரியவரிடம் கடலைக்காட்டி, இறங்கி அப்படியே போகச் சொல்லி உலுக்கினர். அப்பெரியவரும் பயத்தினால் கடலில் இறங்கிக் கண்மறையும் தூரத்திற்கு நீந்திச் சென்றார். இதைக் குரூரரசனையோடு சிரித்துப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டுப் போனார்கள் ராணுவத்தினர். மறுநாள் அந்தப் பெரியவரது உடல் சேந்தாங்குளம் கடற்கரையில் ஒதுங்கியது.

### இந்தியாவின் தார்மீகப் பொறுப்பு

டிச 17 ''தமிழர்களை ஒழித்துக்கட்டி விடுவதென்று வெறிபிடித்து அலையும் சிங்களப் பேரினவாதிகளின் கையில் ஒரு கைதிபோல ஆடுகிறார் ஜெயவர்த்தனே'' என்று, உலகவிஷயங்கள் குறித்த இந்தியக் குழுவின் சென்னைப் பிரிவு ஏற்பாடு செய்திருந்த ஒரு கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ஓய்வுபெற்ற நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர் கடுமையாகத்தாக்கினார்.

'இலங்கையில் மனித உரிமைகள் மீறல்' என்னும் தலைப்பில் பேசிய அவர், ஈழத்தவர்கள் மீது வெறியாட்டமிட்டுவரும் சிறீலங்காப் படுகொலைவாதிகளை வன்மையாகக் கண்டித்தார். ''இலங்கைத் தீவில் தற்போது தமிழர்கள்மீது சிறீலங்கா ராணுவக்குண்டர்கள் நடத்திவரும் வெறித்தாக்குதல்களையும், படுகொலைகளால் உருவாக்கும் பதட்ட நிலையையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மனித உரிமைகள் மீறப்பட்டுவருவது, அமெரிக்க நவீன ஆயுதங்களின் இறக்குமதியால் உருவாகிவரும் ஏகாதிபத்திய ஊடுருவல், இஸ்ரேலிய கூலிப்படையினரின் (மொசாட்) இறக்குமதி... இவற்றையெல்லாம் ஜெயவர்த்தனே, உள்நாட்டு விஷயங்கள் என்று சொல்லிவிட முடியாது. இதை தடுத்து நிறுத்த வேண்டும். பாதுகாப்பற்ற ஈழத்தமிழர்கள்மீது ஜெயவர்த்தனே அரசாங்கம் கண்மூடித்தனமாக நடத்திவரும் இனப் படுகொலை நடவடிக்கைகள் குறித்துப் பிரச்சினை எழுப்புவதில் இந்தியாவுக்குத் தார்மீகப் பொறுப்பு உண்டு. ஈழமக்களை அழித்தொழித்துவிடக் கங்கணங்கட்டிக் கொண்டு செயல்படும் வெறித்தனங்களை உடனடியாக நிறுத்திவிட வேண்டுமென்று சிறீலங்காவை, இந்திய அரசு எச்சரிக்க வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

www.tamilarangam.net



### உணவுப் பொருட்களுடன் விசைப்படகு பிடிபட்டது

டிச 15, அன்று இரவு உணவுப் பொதிகளுடன் ஒரு விசைப்படகு மாதகல் கடற்கரையில் பிடிபட்டது. இவ்வண்டில் 6 மூட்டை அரிசியும், 2 மூட்டை சீனியும், 1 மூட்டை பருப்பும், 60 M. M. மோட்டாரும், 40 பரிவலு இயந்திரங்கள் 3உம் இருந்தன. இப்படகிலிருந்து எவரும் கைது செய்யப்படவில்லை. இவ்வுணவுப் பொருட்கள், பட்டினியால் தவித்துக் கொண்டிருந்த மக்களுக்கு விநியோகிப்பதற்காகக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்விசைப்படகானது மாதகல் கரையை நோக்கிச் செல்லும்போது, ராணுவத்தினர் விசைப்படகிற்கு சமிக்ஞை (வெளிச்சமூலம்) செய்தனர். இதைப் புரிந்துகொண்ட போராளிகள் படகைத் திருப்பியபோது, தமக்குப் பின்புறத்தில் இரு கடற்படைக் கப்பல்கள் துரத்திவருவதைக் கண்டனர். அங்கிருந்தும் திரும்பிக் கரைக்குச் சமாந்தரமாக ஓடும்போது ஹெலிகொப்டர் சத்தம் கேட்டது. இச்சமயம் விசைப்படகை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். படகில் வந்தவர்கள் 1 மைல் தூரத்திற்கப்பால் வண்டியை விட்டு விட்டுத் தப்பித்துச் சென்றனர். மறுநாள் வண்டி சல்லடையாக்கப்பட்டிருந்தது.

### மக்கள் விடுதலைப்படை—சிறீலங்கா கூலிப்படைகள் மோதல்
### கூலிப்படையினர் கொல்லப்பட்டனர்; ஆயுதங்கள் பறிமுதல்

டிச 19, மட்டக்களப்பு அருகே களுவாஞ்சிக்குடியில் சிறீலங்கா கூலிப்படைமீது தாக்குதல் நடைபெற்றது. விடுதலைப் போராளிகள் சென்றுகொண்டிருந்த வாகனமொன்றை கண்ட சிறீலங்கா கூலிப்படை அவர்களை சுற்றிவளைக்க முற்பட்டது. அப்போது போராளிகள் எதிர்த்து தாக்கினர். இதில் சிறீலங்கா கூலிப்பட்டாளங்கள் 8 பேர் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்த ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தத்தாக்குதலை ''ஈழமக்கள் புரட்சிக்கர விடுதலை முன்னணியின்'' இராணுவப்பிரிவான ''மக்கள் விடுதலைப்படையே'' மேற்கொண்டதாக தெரிகிறது.

அன்பார்ந்த தோழர்களே, வாசகர்களே !

ஆகஸ்ட் மாதத்தில் இருந்து ஈழம், இந்தியா தவிர்ந்த பிற பகுதி ''ஈழச் செய்தி வினியோகம்'' இலண்டன் கிளையிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஈழச் செய்தியினைப் பெறுபவர்களும், பெற விரும்புகின்றவர்களும் கீழே உள்ள படிவத்தை நிரப்பி இலண்டன் கிளைக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Please send me..........................................Copies of "EELAM NEWS" per issue.

I enclose a donation for.......................................................................

made payable to "EELAM PEOPLES INFORMATION CENTRE".

(BLOCK CAPITALS PLEASE)

NAME..............................................................................................

ADDRESS.........................................................................................

..............................................................................................

..............................................................................................

COUNTRY........................................................................................

Tel. No..............................................................................................

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்